
மட்டக்களப்பு

# சுவாமி விபுலானந்த

## இசை நடனக் கல்லூரி



சான்றிதழ் வழங்கும் வைபவம்

28-07-2001

மட்டக்களப்பு

# சுவாமி விபுலானந்த
## இசை நடனக் கல்லூரி

## டிப்ளோமா சான்றிதழ்
### வழங்கும் வைபவம்

# 2001

# சிறப்பிதழ்

இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்

248. 1/1 காலி வீதி, கொழும்பு - 04.

# கல்லூரி கீதம்

**இராகம்** : ஹம்சத்வனி **தாளம்** : ஆதி

### பல்லவி

வித்தகன் விபுலானந்தன் வாழ்கவே
முத்தமிழ் தழைத்து நித்தம் ஓங்கவே!

*(வித்தகன்)*

### அனுபல்லவி

மட்டுநகர் தன்னில் இன்பக் கலைகளாம்
மனம் நிறைந்த இசை நடனம் மிளிர்கவே!

*(வித்தகன்)*

### சரணம்

நற்கலைகள் நாமகளின் அருளொடு - என்றும்,
கற்றுக் கலைத் தாயவளை வணங்குவோம்,
பற்றுதலாய் உற்று நோக்கி நித்தமும்
வற்றவிடா முயற்சியோடு தொடருவோம்!

*(வித்தகன்)*

# வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும்

## சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி

# டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம்

காலம் - 28-07-2001 சனிக்கிழமை
முற்பகல் 9.30 மணி

இடம் - மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த
இசை நடனக்கல்லூரி "இராஜதுரை அரங்கு"

தலைமை - **திரு. ந. பரம்சோதி**
*மேலதிக செயலாளர் (இந்து விவகாரம்),*
*வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு*
*மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள்*
*அமைச்சு.*

பிரதம விருந்தினர் - **மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்கள்
*அமைச்சர்,*
*வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு*
*மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள்*
*அமைச்சு.*

சிறப்பு விருந்தினர்கள் -

**சுவாமி ஜீவனானந்தாஜி**
*தலைவர்,*
*இராம கிருஷ்ண மிஷன்,*
*மட்டக்களப்பு.*

**திரு. வே. இரகுநாதன்**
*செயலாளர்,*
*வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு*
*மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள்*
*அமைச்சு.*

**பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா**
*உப வேந்தர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

**திரு.இ. மோனகுருசாமி**
*அரசாங்க அதிபர்,*
*மட்டக்களப்பு.*

# நிகழ்ச்சி நிரல்

காலை *9.30* - **மங்கள விளக்கேற்றல்**

*9.35* - **தமிழ் வாழ்த்து**
*கல்லூரி மாணவர்கள்*

*9.40* - **வரவேற்புரை**
**திருமதி. வத்சலா சங்கரநாராயணன்**
*விரிவுரையாளர்,*
*சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி.*

*9.50* - **ஆசியுரை**
**சுவாமி ஜீவனானந்தாஜி**

*10.00* - **தலைமையுரை**
**திரு. ந. பரம்சோதி**
*மேலதிக செயலாளர் (இந்து விவகாரம்),*
*வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு.*

*10.15* - **கல்லூரி அறிக்கை வாசித்தல்**
**திருமதி. பாலாம்பிகை இராஜேஸ்வரன்**
*பதில் அதிபர்,*
*சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி.*

*10.30* - **டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்**

*11.00* - **சிறப்பு விருந்தினர்கள் உரை**
**திரு. இ. மோனகுருசாமி**
*அரசாங்க அதிபர்,*
*மட்டக்களப்பு.*

**பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா**
*உபவேந்தர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

**திரு. வே. இரகுநாதன்**
*செயலாளர்,*
*வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு.*

*11.20* - **பிரதம விருந்தினர் உரை**
**கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா** *அவர்கள்*
*அமைச்சர்,*
*வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு.*

*11.30* - **இசை நிகழ்ச்சி**
கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள்

*12.00* - **நடன நிகழ்ச்சி**
கல்லூரி மாணவிகள்

*12.30* - **நன்றியுரை**
**திரு. வே. ஸ்ரீதரன்**
*விரிவுரையாளர்,*
*சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரி.*

**இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றேன்.**

248. 1/1. காலி வீதி.
கொழும்பு - 04.

**சாந்தி நாவுக்கரசன்,**
**பணிப்பாளர்,**
**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.**

# கல்லூரி நிர்வாக மேற்பார்வை

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள்
அமைச்சு

**மாண்புமிகு கே.என். டக்ளஸ் தேவானந்தா**
*அமைச்சர்*

**திரு. வே. இரகுநாதன்**
*செயலாளர்*

**திரு. ந. பரம்சோதி**
*மேலதிகச் செயலாளர் (இந்து விவகாரம்)*

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
*பணிப்பாளர்*

**திரு. என். விஜயதாச**
*திணைக்களக் கணக்காளர்*

**திரு. வீ. விக்கிரமராஜா**
*உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)*

**திரு. குமார் வடிவேல்**
*உதவிப் பணிப்பாளர் (இந்து விவகாரம்)*

**திரு. எஸ். தெய்வநாயகம்**
*உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)*

*(இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி தொடர்பான கடமைகளுக்கு உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் பொறுப்பாக உள்ளார்.)*

# சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி

## பதில் அதிபர், விரிவுரையாளர்கள்

*பதில் அதிபர் :*

**திருமதி பாலாம்பிகை இராஜேஸ்வரன்** - *பி.ஏ. (இலங்கை) சங்கீத வித்துவான், சங்கீத டிப்ளோமா (வயலின்) தமிழ்நாடு கர்நாடக இசைக் கல்லூரி, சென்னை.*

*விரிவுரையாளர்கள் :*

*வாய்ப்பாட்டுத்துறை*

**திருமதி வத்சலாதேவி சங்கரநாராயணன்** - *சங்கீத டிப்ளோமா (வாய்ப்பாட்டு) சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி, மட்டக்களப்பு.*

**திருமதி பிரியதர்ஷினி ஜதீஸ்வரன்** - *சங்கீத டிப்ளோமா (வாய்ப்பாட்டு) இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம்*

கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு ஏற்படுத்திக் கொண்டபின் உபவேந்தர், பேராசிரியர் மா. செ. மூக்கையா அவர்கள் கல்லூரிக்கு விஜயம் செய்து சகல ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகஸ்தர்களுடன் கலந்துரையாடல் நடத்திக் கல்லூரியின் வருங்கால நிலைபற்றி எடுத்துரைத்தார்.

எமது கல்லூரி வளர்ச்சிக்கு உதவிய சகல ஆசிரியர்கள், நிர்வாகத்துறையினர் அனைவருக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். இனிவரும் காலத்தில் மாணவர்களின் ஒற்றுமையின் உழைப்பில்தான் கல்லூரியின் எதிர்கால வளர்ச்சி தங்கியுள்ளது எனக் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

பாலாம்பிகை இராஜேஸ்வரன்,
பதில் அதிபர்.

# கற்கை நெறி

| | துறைகள் | பிரதான பாடம் | துணைப்பாடம் |
|---|---|---|---|
| இசைக்கலைமாமணி | இசைத்துறை | வாய்ப்பாட்டு | வீணை/வயலின்/ மிருதங்கம் |
| | வாத்தியத்துறை | வீணை/வயலின்/ மிருதங்கம் | வாய்ப்பாட்டு |
| நடனக்கலைமாமணி | நாட்டியத்துறை | பரதநாட்டியம் | வாய்ப்பாட்டு |

இந்து நாகரிகமும் யாழ் நூலும் ஒன்றிணைந்த பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன.

1995ம் ஆண்டு, முதலாம் ஆண்டு கற்கை நெறியினைத் தொடரும் மாணவர்களுக்கு புதிய மீளமைக்கப்பட்ட பாடவிதானம் அமைச்சின் அங்கீகாரத்துடன் 1995 ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

முதலாம் ஆண்டில் தமிழ்மொழி, நுண்கலைகள் ஓர் அறிமுகம் என்ற பாடமும், இரண்டாம் ஆண்டில் தென்னிந்திய பண்பாட்டு வரலாறு பகுதி I (கி.பி. 14 ஆம் நூற்றாண்டு வரை), மூன்றாம் ஆண்டில் தென்னிந்திய பண்பாட்டு வரலாறு பகுதி II (கி.பி. 14 முதல் 20 ம் நூற்றாண்டு வரை), நான்காம் ஆண்டில் தமிழ் இசை நூல்கள் ஆகிய பாடங்கள், இந்து நாகரிகம் யாழ் நூல் ஒன்றிணைந்த பாடத்திற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றன.

இறுதி வருட மாணவர்களுக்கு ஆற்றுகை, ஆய்வுக்கட்டுரை என்ற பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் பதில் அதிபர் அவர்களின்

# கல்லூரி அறிக்கை 1999 - 2000

கிழக்கிலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 19 வருடங்களைத் தாண்டியுள்ளது. இக்கால வேளையில் இக்கல்லூரி உருவாக்கி வெளியேற்றிய மாணவர்களின் தொகை 148 ஆகும். இவர்களில் கடந்த ஆண்டு பட்டம் பெற்றுக் கொண்டவர்களைத் தவிர்ந்த ஏனையோர் இசை, நடன ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இன்று நடைபெறும் இந்த இசைக் கலைமாமணி, நடனக் கலைமாமணிச் சான்றிதழை 10 மாணவர்கள் பெறத் தகுதி உடையவர்களாக எமது திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் இசைத்துறையில் 07 மாணவர்களும், நடனத்துறையில் 03 மாணவர்களும் அடங்குவர்.

கல்லூரியின் கடந்த இரு ஆண்டு காலம் ஓர் இருள் சூழ்ந்த காலமாகப் பல சோதனைகளையும், வேதனைகளையும் அவ்வப்போது மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் கசப்புணர்வுகளைத் தந்தாலும், அக்கசப்பு உணர்வின் இறுதிக் கட்டமாக கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் சம்பிரதாய பூர்வமாக கடந்த ஏப்பிரல் மாதம் 20ம் திகதி கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் உயர்கல்வி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இவ்விணைப்பு உரிய முறையில் நடைபெற அரும்பாடுபட்ட எமது அமைச்சின் செயலாளர்கள் திரு. வே. இரகுநாதன், திரு. ந. பரம்சோதி, மற்றும் அமைச்சின் ஏனைய உயர் அதிகாரிகள், திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு.எஸ். தெய்வநாயகம், உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) திரு. வீ. விக்கிரமராஜா, உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல், கணக்காளர் திரு என். விஜயதாச, பிரதம எழுதுனர் திரு. பா. வைரவநாதன் மற்றும் அங்கு கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

கல்லூரியின் செயற்திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு முக்கியமான காரணியாக அமைவது நிர்வாகத்திற்கான ஆலோசனைகளும், வழிகாட்டலுமாகும். இந்த வகையில் எமது கல்லூரியின் நிருவாகத்தை மேற்கொண்டுவரும் எமது இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் முக்கியமானவர்கள். அவர்களது ஆலோசனைகளும், வழிகாட்டலும் கல்லூரியின் மேம்பாட்டுக்கு உறுதுணையாக விளங்கியதை யாராலும் மறுக்க முடியாது.

கல்லூரியில் நிரந்தர விரிவுரையாளர்கள் 10 பேர். இதில் வாய்ப்பாட்டு - 2, மிருதங்கம் - 2, வயலின் - 3, வீணை - 2, தமிழ், பண்பாடு, நுண்கலை, தமிழிசை நூல் - 1. பகுதிநேர விரிவுரையாளர் நடனத்துறை - 1. அனைத்து விரிவுரையாளர்களினதும் சேவை மனப்பாங்கு எமது கல்லூரியின் கற்பித்தல் நடவடிக்கைகள் மேலும் சிறப்பாக அமையக் காரணமாக அமைந்துள்ளது.

கல்லூரியின் வளர்ச்சி கருதி விரிவுரையாளர்களும், மாணவர்களும் தேடல் ஆய்வு என்பனவற்றின் மூலமாக தமது துறைசார் அறிவினை வளர்த்துக்கொள்ளும் வகையில் திணைக்களம் எமது நூல் நிலையத்திற்குத் தேவைப்படும் நூல்களை வழங்கியுள்ளது. அத்துடன் கல்லூரியின் கட்டடத் திருத்த வேலைகளும் மிகவும் பாரிய செலவில் சுமார் 1.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து அவற்றைச் சீர் செய்தும், புதுப்பித்தும் வழங்கியுள்ளது. அத்துடன் துறைசார் வாத்தியக் கருவிகள் போன்றவற்றையும் வழங்கியுள்ளது.

திணைக்களத்தினால் தலைநகரில் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவிற்கு கல்லூரி ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் கல்லூரியின் திறமை வெளிக்கொணரப்பட்டது.

16.11.2000ம் திகதி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து வருகை தந்த நடன விரிவுரையாளர் திரு. கே. ராமையா என்பவரால் நடனத்துறை மாணவர்களுக்கு 2 நாள் நடன செயல்முறைக் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதனால் நடன மாணவர்களின் செயற்பாடு ஊக்குவிக்கப்பட்டது. இதே போன்று யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை இசை விரிவுரையாளர் திரு. பத்மலிங்கத்தினால் இசைக் கச்சேரியும் நடாத்தப்பட்டது. இது இசை நடன மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது.

දිස්ත්‍රික් කාර්යාලය
மாவட்டச் செயலகம்
DISTRICT SECRETARIAT

## மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்

## அவர்களின் ஆசிச் செய்தி

சில காலமாகத் தடையுற்றிருந்த கல்வி இறையருளாலும், மாணவர்களின் விடாமுயற்சியினாலும் தொடர்ந்தும் போதிக்கப்பட்டு, பயிற்றப்பட்டு வருவதையிட்டு மிகவும் பெருமையடைகிறேன். அத்தோடு மாணவர்களின் சான்றிதழ் வழங்கும் வைபவம் சுவாமியின் நினைவு நாளில் நடைபெறுவதையிட்டு மென்மேலும் பேருவகை அடைவதோடு இனிவரும் காலங்களிலும் சகல மாணவர்களும் நன்றாகக் கல்வி பயின்று இதேபோன்ற சான்றிதழை தொடர் ஆண்டாகப் பெற வேண்டுமென அனைத்து மாணவர்களுக்கும் எனது அன்பார்ந்த வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கச்சேரி,
மட்டக்களப்பு.

இ. மோனகுருசாமி,
மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த இசைநடனக் கல்லூரியில் நான்காண்டு டிப்ளோமா கற்கை நெறியை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

நான்காண்டு காலம் முறையாக இசை நடனத் துறைகளிற் பயிற்சி பெற்ற மாணவர்கள் 'இசைக்கலைமாமணி', 'நடனக் கலைமாமணி' என்னும் பட்டங்களைப் பெறுகின்றனர்.

இக்கல்லூரியின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை தற்போது பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாயினும், எமது திணைக்களம் நிர்வகித்த காலத்திலேயே இம்மாணவர்கள் தமது முழுமையான பயிற்சியையும் முடித்துக் கொண்டுள்ளனர் என்பதையிட்டுப் பெருமையடைகின்றேன்.

இவ்வேளையில் தமது பணியை செவ்வனே ஆற்றியுள்ள இக்கல்லூரியின் பதில் அதிபர், விரிவுரையாளர்கள், ஏனைய பணியாளர்களை மனமாரப் பாராட்டுவதோடு சான்றிதழ் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு எனது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்,**
பணிப்பாளர்.

**இந்துசமய கலாசார அலுவல்கள்**
**திணைக்களம்,**
**248, 1/1 காலி வீதி .**
**கொழும்பு - 04.**

# கிழக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தரின் வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் பயின்று, பயிற்சிகளை பூர்த்தி செய்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சிக்கான சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இரண்டு தசாப்தமாக இயங்கி வரும் இக்கல்லூரி பல நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நுண்கலைத் துறையில் சிறப்புப் பயிற்சி அளித்து வந்துள்ளமை பாராட்டுக்குரியது.

இசை, நடனம் ஆகிய துறைகளில் ஆர்வம் கொண்டவர்கள் அபூர்வமாகவே காணப்படுகின்றனர். அவர்களில் வெகு சிலரே அத்துறைகளில் பிரகாசித்து வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்தவர்கள். அதுவும் கீழைத்தேய நாடுகளில் இத்துறைகளில் ஈடுபடுவோருக்கான எதிர்காலம் நிச்சயமற்றதாக காணப்படுகின்றது. ஆனால், இப்போது வளர்ந்து வருகின்ற நிறுவன ரீதியான பயிற்சிகளும், சான்றிதழ் உத்தரவாதங்களும், கலைத்துறையைச் சார்ந்தவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பனவாக அமையலாம்.

இன்று இப் பயிற்சியினை நிறைவு செய்து கொண்டு கல்லூரியைவிட்டு வெளியேறும் மாணவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகுக. அவர்களுடைய எதிர்காலம் சுபீட்சமாக அமையவும், கலைத்துறையில் தொடர்ந்தும் பயனுள்ள வகையில் ஈடுபாட்டினை வளர்த்துக்கொள்ளவும், எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாணவர்களை முறையாக பயிற்றுவித்து, அப் பயிற்சியில் தேர்ச்சியடைய வழிவகுத்த ஆசிரியர்களுக்கும், இக்கல்லூரியின் நிருவாக அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகும்.

பேராசிரியர் மா.செ. மூக்கையா.
துணைவேந்தர்.
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

நுண்கலைகளில் இசையும், நடனமும் மக்களைக் கவரும் தெய்வீகக் கலைகளாகும். பண்டைக்காலம் தொடங்கி இக்கலைகள், பரம்பரை பரம்பரையாகவும், கலைக்கூடங்கள் வாயிலாகவும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் இக்கலைகளுக்கு மிகவும் சிறந்த இடம் அளிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் இக்கலைகளை வளர்த்தெடுப்பதில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பிரிவு முக்கிய இடம் வகிக்கின்றது. அதேபோல் கிழக்கிலங்கையில் சுவாமி விபுலானந்தரின் பெயரைத் தாங்கிய இசை நடனக் கல்லூரி கடந்த 18 வருட காலமாக தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு இசை, நடனத்துறையை வளர்ப்பதில் அரும் பாடுபட்டு வருவதை யாவரும் அறிவர்.

இதுவரை இக்கல்லூரியில் 147 மாணவ, மாணவிகள் இசை, நடனத்துறைகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி நான்காண்டு கற்கைநெறியை முடித்து டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இசை, நடனத்துறைகளில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இது பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்நிலையில் மாணவர்களின் போராட்டத்தின் மூலம் இக்கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தறுவாயில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் இறுதிச் சான்றிதழ் வழங்கும் வைபவமாகவும் இது அமைகின்றது. இசைத்துறையில் ஏழுபேரும் நடனத்துறையில் மூன்று பேரும் ஆக மொத்தம் 10 பேர் 'இசைக்கலைமாமணி', 'நடனக்கலைமாமணி' ஆகிய துறைகளில் டிப்ளோமாப் பட்டங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். இவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. கடந்த பதினெட்டு வருட காலமாக திணைக்களம் இக்கல்லூரியை வளர்த்தெடுப்பதில் காட்டிய பங்களிப்பு அளப்பரியது எனலாம். இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றியைக் கூறி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ந. பரம்சோதி,
மேலதிக செயலாளர்.

RAMAKRISHNA MISSION
(CEYLON BRANCH)
ASHRAMA & CHILDREN'S HOMES,
RAMAKRISHNAPURAM, BATTICALOA, SRI LANKA.
065 - 22752

# எதிர்காலம் ஓங்கி நிலைபெற்று வளர்க!

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி, வரலாற்றுத் திருப்பம் ஒன்றின் மையப்புள்ளியில் நின்றுகொண்டு, தான் உருவாக்கிய மாணவர்களின் பத்தாவது தொகுதிச் சான்றிதழ் வழங்கும் சிறப்பு நிகழ்வைக் கொண்டாடுவது பெருமகிழ்ச்சி தருகின்றது.

இங்கு பயின்ற காலங்களில் தங்களது இலக்கு நோக்கிய பயணத்தில், மாணவர்கள் எதிர் கொண்ட அனுபவங்கள் வாழ்வியலின் பல்வேறு சிறப்புக்களையும் அவர்கள் தனதாக்கிக் கொள்ள வழிவகுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இங்கு திறமைச் சான்றிதழ் பெற்று பாராட்டப்படும் இசை, நடனத்துறை மாமணிகளை நாமும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இக்கல்விப் பணியை நிறைவேற்றுவதிலுள்ள இடர்களைக் கவனியாது இதுகாலவரை சிறந்த சேவையாற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் பதில் அதிபர், உதவி அதிபர், விரிவுரையாளர்கள், உள்ளிட்ட அனைத்து உத்தியோகஸ்தர்களையும் மதிப்பளித்து கௌரவிப்போமாக.

இராமகிருஷ்ணபுர வளாகத்தில் இக்கல்லூரியை ஆரம்பித்து அதன் நிருவாகத்தை இதுகால வரை நெறிப்படுத்தும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகஸ்தர்களையும் அதற்குப் பொறுப்பான நிருவாகிகளையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து பாராட்டுகின்றேன்.

இந்நிகழ்ச்சியானது ஒரு நிறைவின் மற்றொரு தொடக்கமாயிருந்து எதிர்காலம் ஓங்கி நிலைபெற்று வளர்ந்து வளம்பெற இதனுடன் தொடர்புற்ற அனைவருக்கும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருட்கடாட்சம் கிடைக்க மனதாரப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

இறைபணியில்,

சுவாமி ஜீவனானந்தா

- சுவாமி ஜீவனானந்தா -

**20-04-2001ம் நாள், உயர் கல்வி அமைச்சர் மாண்புமிகு இந்திக குணவர்த்தன அவர்களிடம், மாண்புமிகு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியை சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தபோது வழங்கப்பட்ட பத்திரம்**

# மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைத்தல்

மட்டுநகர் சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரியைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கு எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக மேற்படி கல்லூரியை உயர்கல்வி அமைச்சராகிய மாண்புமிகு இந்திக குணவர்த்தன அவர்களிடம் கையளிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். இன்றுவரை இக்கல்லூரி எனது அமைச்சாகிய வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் கீழ் வரும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

மட்டுநகரின் பெரும் அறிஞரும், ஞானியும் ஆகிய சுவாமி விபுலானந்தர் அவர்களது பெயரில் இயங்கும் இந்நிறுவனம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவில் இணைவதையிட்டு நாம் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம். இந்நடவடிக்கையினால் நுண்கலைக் கல்வியின் தரம் மேம்படுவதற்கு வழி பிறந்துள்ளது.

கே.என். டக்ளஸ் தேவானந்தா பா.உ.
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர்.

උතුර සංවර්ධන, පුනරුත්ථාපන, ප්‍රතිසංස්කරණ හා
උතුර හා නැගෙනහිර ද්‍රවිඩ කටයුතු අමාත්‍යාංශය

**வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு**
**மற்றும் வடக்கு, கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு**

**MINISTRY OF DEVELOPMENT, REHABILITATION AND RECONSTRUCTION OF THE NORTH AND TAMIL AFFAIRS NORTH AND EAST**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக இணைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா மலருக்கு செய்தி வழங்குவதில் உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது.

இந்து கலாசார திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டு சுமார் பதினெட்டு வருடங்கள் தமிழ் பேசும் மக்களின் கலை கலாசார வெளிப்பாட்டுக்கு ஆக்கமுள்ள பங்களிப்பு நல்கிய இந் நிறுவனம் பல்கலைக்கழக தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதோடு, நூற்றுக்கணக்கான மாணவர்கள் இசை மற்றும் நடனத்துறைகளில் பட்டம் பெறுவதற்கும் இந்த நிறுவனம் களமாக அமைந்து இருக்கின்றது.

இங்கு பயின்ற மாணவர்களினதும், பயிற்றுவித்த விரிவுரையாளர்களினதும், எதிர்கால சமூகத்தினதும் நலன்கள் பேணப்படுவதற்காக இந் நிறுவனம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக இதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் நீண்ட காலக் கோரிக்கையொன்று நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது.

இவ் வகையில் இயல்பாகவே எழும்பும் உற்சாகத்துடன் இந்த நிறுவனம் மண்ணில் கலை கலாசாரப் பாரம்பரியங்களை பேணிப் பாதுகாக்கும் நிலையமாகவும், எதிர்காலக் கலைஞர்களின் வித்துவத் திறமைகளை வளர்க்கும் மையமாகவும் வளம் பல பெற்று வாழ வாழ்த்துக்களை வாரி வழங்குகின்றேன்.

நன்றி.

**கே.என். டக்ளஸ் தேவானந்தா, பா.உ**
**வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு,**
**மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர்**

උතුර සංවර්ධන, පුනරුත්ථාපන, ප්‍රතිසංස්කරණ හා
උතුර හා නැගෙනහිර ද්‍රවිඩ කටයුතු අමාත්‍යාංශය

**வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு**
**மற்றும் வடக்கு, கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு**

**MINISTRY OF DEVELOPMENT, REHABILITATION AND RECONSTRUCTION OF THE NORTH AND TAMIL AFFAIRS NORTH AND EAST**

## வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் அளித்துள்ள வாழ்த்து

தமிழர் வாழ்வில் கலை ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கலையில் அறுபத்தினான்கு அம்சங்கள் இருப்பதாக நம் முன்னோர் கூறியுள்ளனர். இயல், இசை, நாடகம் என்று தமிழை வகைப்படுத்தி முத்தமிழ் என்று பெருமைப்படுகின்றோம். இசையும் நடனமும் முற்காலத்தில் குருகுல முறையில் கற்பிக்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் அம்முறை அருகி கல்லூரிகளில்தான் இவை கற்பிக்கப்படுகின்றன.

தமிழரின் பாரம்பரிய பிரதேசமான கிழக்கு மாகாணத்திற்கு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி கடந்த 15 வருடங்களாகப் பாரிய சேவையாற்றி வருகின்றது. இக் கல்லூரி அண்மையில் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் கல்லூரியின் தரமும், மாணவர்களின் தரமும் மேம்படும் என்பதில் ஐயமில்லை.

இதுவரை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இக் கல்லூரியில் நான்காண்டு கற்கை நெறியை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவிகளுக்கு எமது வாழ்த்தைத் தெரிவிப்பதுடன் அவர்கள் எதிர்காலம் சிறப்புற அமையுமாறு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

தாங்கள் கற்ற கலையை எதிர்கால சந்ததியினருக்கு அளித்து எம் நாட்டிற்கும் இனத்திற்கும் அவர்கள் நற்சேவைபுரிய வேண்டுகின்றேன்.

நன்றி.

வே. இரகுநாதன்.
செயலாளர்.

## நாட்டியத்துறை

| | | |
|---|---|---|
| **செல்வி கிரிஷானா ஷர்மிளா கொரேய்ரா** *(பகுதிநேர விரிவுரையாளர்.)* | - | பரதநாட்டிய நுண்கலைப் பட்டதாரி BFA<br>பாரதிதாசன் பல்கலைக்கழகம், தமிழ்நாடு |

## வாத்தியத்துறை

| | | |
|---|---|---|
| **திருமதி பாலாம்பிகை இராஜேஸ்வரன்** | - | பி.ஏ. (இலங்கை)<br>சங்கீத வித்துவான்,<br>சங்கீத டிப்ளோமா (வயலின்)<br>தமிழ்நாடு கர்நாடக இசைக்கல்லூரி,<br>சென்னை. |
| **செல்வி சரஸ்வதி சுப்பிரமணியம்** | - | சங்கீத டிப்ளோமா (வயலின்)<br>இராமநாதன் நுண்கலைக் கல்லூரி,<br>யாழ்.பல்கலைக்கழகம். |
| **திரு. வேல்முருகு ஸ்ரீதரன்** | - | சங்கீத டிப்ளோமா (மிருதங்கம்)<br>சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி,<br>மட்டக்களப்பு. |
| **திருமதி. அனுஷியா பிரைட்** | - | சங்கீத டிப்ளோமா (வீணை)<br>இராமநாதன் நுண்கலைக் கல்லூரி,<br>யாழ். பல்கலைக்கழகம். |
| **திரு. ஏ. நே. வோட்ஸ் வேர்த்** | - | சங்கீத டிப்ளோமா (மிருதங்கம்)<br>இராமநாதன் நுண்கலைக் கல்லூரி,<br>யாழ். பல்கலைக்கழகம். |

**திருமதி கௌரிமலர் மகேந்திரன்** - சங்கீத டிப்ளோமா (வீணை)
சுவாமி விபுலானந்த
இசை நடனக் கல்லூரி,
மட்டக்களப்பு.

**திருமதி. ஜெயந்தி திசாநாயக்கா** - சங்கீத டிப்ளோமா (வயலின்)
இராமநாதன் நுண்கலைக்
கல்லூரி,
யாழ் பல்கலைக்கழகம்.

## தமிழ், நுண்கலை, தென்னிந்தியப் பண்பாட்டு வரலாறு

**திரு. ஆர். ஸ்டான்லி பிரபாகரன்**
*(பகுதி நேர விரிவுரையாளர்)*

## எழுதுநர்

**திருமதி சாந்தி கோணேஸ்வரன்**

## சிற்றூழியர்கள்

| | |
|---|---|
| **திரு. க. கோபாலசுந்தரம்** | அலுவலக உதவியாளர் |
| **திரு. எஸ். அமலதாஸ்** | காவலாளி |
| **திரு. எஸ். ஜெயக்குமார்** | காவலாளி |

## கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளோர்

### வாய்ப்பாட்டுத்துறை

**கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி**

சங்கீத டிப்ளோமா
வாய்ப்பாட்டு (வீணை)
சென்னைப் பல்கலைக்கழகம்,
சங்கீத வித்துவான் -
வாய்ப்பாட்டு, தமிழ்நாடு
கர்நாடக இசை நடனக்
கல்லூரி, சென்னை.

இவர் 1986ம் ஆண்டிலிருந்து கல்லூரியின் அதிபராகவும், சிரேஷ்ட விரிவுரையாளர்களில் ஒருவராகவும் கடமை புரிந்தவர். 19.07.97 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். வாய்ப்பாட்டுத்துறை வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வந்தவர். இவரது சேவை நினைவு கூரத்தக்க ஒன்றாகும்.

### நடனத்துறை

**திருமதி லக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தராஜா**

பரத நாட்டிய டிப்ளோமா
கலாஷேத்திரா நுண்கலைக்
கல்லூரி, சென்னை.

இவர் 1989ம் ஆண்டிலிருந்து நடனத்துறை விரிவுரையாளராக கல்லூரியில் சேவையாற்றியவர். நடனத்துறை வளர்ச்சிக்கு இவர் காட்டிய ஆர்வம் பாராட்டிற்குரியது. 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

**திருமதி கமலாதேவி ஞானதாஸ்**

பரதநாட்டிய டிப்ளோமா
நுண்கலைப்பீடம்,
அடையாறு, சென்னை.

இவர் 1986 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியின் நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளராகவும், பிரதி அதிபராகவும் கடமை புரிந்தவர். 1999ஆம் ஆண்டு யூலை மாதம் தொடங்கி கல்லூரியின் பதில் அதிபராக சேவை புரிந்து 2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்துடன் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். தனது சேவைக் காலத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்காக திணைக்-களத்துடன் இணைந்து முழுமையான பங்களிப்பை வழங்கியவர்.

## 1999 ஆம் ஆண்டு நான்காண்டு கற்கைநெறியினை முடித்து டிப்ளோமா சான்றிதழ் பெறுவோர்

### இசைக்கலை மாமணி

**இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் சித்தியடைந்தோர் :**

| | |
|---|---|
| பகவத்சிங்கம் நித்தியானந்தன் | பதுளை |
| அன்ரெனி ஜெனிபர் அம்மா லம்பேட் அருள்மொழி | மன்னார் |

**சாதாரண பிரிவில் சித்தியடைந்தோர் :**

| | |
|---|---|
| ஜயந்தினி மனோகரராஜா | மட்டக்களப்பு |
| கோபிகாதிலகம் இராஜரெட்னம் | மட்டக்களப்பு |
| சுமதி குணநாயகம் | மூதூர் |
| விஜயபாமினி விஜயராஜா | திருகோணமலை |
| தமிழ்வாணி பாலசிங்கம் | கல்முனை |

### நடனக்கலை மாமணி

**சாதாரண பிரிவில் சித்தியடைந்தோர் :**

| | |
|---|---|
| கீதா விஸ்வலிங்கம் | மட்டக்களப்பு |
| சுடர்மதி யோகநாதன் | திருகோணமலை |
| ஜயந்தினி பரமலிங்கம் | தம்பிலுவில் |

## சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரிப் பட்டமளிப்பு விழா இசை நிகழ்ச்சியில் பங்குபற்றும் மாணவர்களின் விபரம்

### 01. தமிழ் வாழ்த்து

1. பாலமனோகரி இரட்ணசபாபதி
2. நீலாம்பரி பாக்கியராஜா
3. சுதர்ஷினி தர்மராஜா
4. திரேஸ் புஸ்பராஜா
5. மதிவதனி வேலுப்பிள்ளை

### 02. லகு சங்கீதம்

| | | |
|---|---|---|
| பாட்டு | : | சுயந்தி கந்தசாமி<br>பேரொளி சண்முகம்<br>ஸ்ரீதேவி வேலுப்பிள்ளை<br>சேவியர் யூட்மோக்கிளின்ரா |
| வயலின் | : | சரஸ்வதி சுப்பிரமணியம்<br>ஜெயசுதா அருச்சுணன் |
| வீணை | : | காயத்திரி சின்னையா<br>விதுஷா பரமேஸ்வரன் |
| மிருதங்கம் | : | திரு. ஈ.என். வோர்ட்ஸ் வேர்த் |
| கஞ்சிரா | : | திரு. வேல்முருகு ஸ்ரீதரன் |

# சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரிப் பட்டமளிப்பு விழா நடன நிகழ்ச்சியில் பங்குபற்றும் மாணவர்களின் விபரம்

## *01. தாண்டவ லாஸ்ய அஞ்சலி :*

1. வெண்ணிலா சிவலோகநாதன்
2. பிறேமலதா மகேந்திரன்
3. துஷ்யந்தி பாலசுந்தரம்
4. கேமலதா இராமையா
5. பாமினி திருச்செல்வம்
6. புஷ்பகாந்தினி கந்தசாமி
7. சிவதர்ஷினி சின்னத்தம்பி
8. சர்மினி அழகையா
9. ரேணுகா சண்முகநாதன்
10. செல்வன். நாகமணி ஜெயநீதன்

## *02. கிராமிய நடனம்*

1. வெண்ணிலா சிவலோகநாதன்
2. பிறேமலதா மகேந்திரன்
3. துஷ்யந்தி பாலசுந்தரம்
4. ஜெயக்குமாரி சண்முகரெட்ணம்
5. பாமினி திருச்செல்வம்
6. புஷ்பகாந்தினி கந்தசாமி
7. சிவதர்ஷினி சின்னத்தம்பி
8. சர்மினி அழகையா
9. நகுலாதேவி நல்லையா
10. ஜெயகெளரி சுந்தரநாதன்

**நடன அமைப்பு :**

| | | |
|---|---|---|
| நட்டுவாங்கம் | : | செல்வி சி. ஷார்மிளா கொறேய்ரா |
| பாட்டு | : | திருமதி பிரியதர்ஷினி ஜெயதீஸ்வரன் |
| மிருதங்கம் | : | திரு. வேல்முருகு ஸ்ரீதரன் |
| வயலின் | : | திருமதி. பாலாம்பிகை இராஜேஸ்வரன் |

சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

நடனக்கலைமாமணி

1999

மட்டக்களப்பு


சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி
மட்டக்களப்பு
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்
இசைக்கலைமாமணி.
1999

# அட்டவணை - 1

## 1989 ஆம் ஆண்டு முதல் மாணவர் அனுமதி

| ஆண்டு | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாட்டு | 16 | அனுமதிக்கப்படவில்லை | 17 | 13 | 14 | 23 | 18 | 13 | 20 | 19 | 10 | அனுமதிக்கப்படவில்லை |
| வீணை | 03 | | 01 | 01 | -- | -- | -- | -- | -- | 01 | -- | |
| வயலின் | 01 | | 01 | 01 | -- | 01 | -- | -- | -- | -- | -- | |
| மிருதங்கம் | 02 | | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 01 | |
| நடனம் | 03 | | 05 | 08 | 09 | 07 | 10 | 7 | 16 | 20 | 05 | |
| மொத்த அனுமதி | 25 | | 24 | 23 | 23 | 31 | 28 | 20 | 36 | 40 | 16 | |

# Table - 1

## Students Admission Since 1989

| Year | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Vocal | 16 | Not Admitted | 17 | 13 | 14 | 23 | 18 | 13 | 20 | 19 | 10 | Not Admitted |
| Veena | 03 | | 01 | 01 | -- | -- | -- | -- | -- | 01 | -- | |
| Violin | 01 | | 01 | 01 | -- | 01 | -- | -- | -- | -- | -- | |
| Miruthangam | 02 | | -- | -- | -- | -- | -- | -- | -- | -- | 01 | |
| Bharatham | 03 | | 05 | 08 | 09 | 07 | 10 | 7 | 16 | 20 | 05 | |
| Total Admission | 25 | | 24 | 23 | 23 | 31 | 28 | 20 | 36 | 40 | 16 | |

## அட்டவணை - 2
### கல்லூரி மாணவர் நிலை - 2001

| ஆண்டு | வாய்ப்பாட்டு | நடனம் | வீணை | வயலின் | மிருதங்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2ம் வருடம் | 03 | -- | -- | -- | 01 | 04 |
| 3ம் வருடம் | 05 | 13 | 01 | -- | -- | 19 |
| 4ம் வருடம் | 04 | 09 | 01 | -- | -- | 14 |
| மொத்தம் | 12 | 22 | 02 | -- | 01 | 37 |

## Table - 2
### Students in 2001

| Year | Vocal | Bharatham | Veena | Violin | Miruthangam | Total |
|---|---|---|---|---|---|---|
| Second | 03 | -- | -- | -- | 01 | 04 |
| Third | 05 | 13 | 01 | -- | -- | 19 |
| Fourth | 04 | 09 | 01 | -- | -- | 14 |
| Total | 12 | 22 | 02 | -- | 01 | 37 |

## 1998 ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | கீதா யோகேந்திரன் | - | வாய்ப்பாட்டு |
| 2. | மைதிலி தருமலிங்கம் | - | வாய்ப்பாட்டு |
| 3. | சியாமளா பிறீனட் செபஸ்டியன் | - | வாய்ப்பாட்டு |
| 4. | அகிலேஸ்வரி சுப்பிரமணியம் | - | வாய்ப்பாட்டு |
| 5. | வெனிசியா ஆரோக்கியநாதன் | - | வாய்ப்பாட்டு |
| 6. | சாந்தினி மாணிக்கவாசக சர்மா | - | வாய்ப்பாட்டு |
| 7. | ஏஞ்சலின் சுகந்தினி செல்வராஜா | - | வாய்ப்பாட்டு |
| 8. | பிறேமநந்தினி கனகசிங்கம் | - | நடனம் |
| 9. | பத்மா பொன்னையா | - | நடனம் |
| 10. | பிரேமினி பீதாம்பரம் | - | நடனம் |
| 11. | உதயணி புண்ணியசீலன் | - | நடனம் |

## 1999 ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | பகவத்சிங்கம் நித்தியானந்தன் | - | வாய்ப்பாட்டு |
| 2. | அன்ரெனி ஜெனிபர் அம்மா லம்பேட் அருள்மொழி | - | வாய்ப்பாட்டு |
| 3. | ஜயந்தினி மனோகரராஜா | - | வாய்ப்பாட்டு |
| 4. | கோபிகாதிலகம் இராஜரெட்னம் | - | வாய்ப்பாட்டு |
| 5. | சுமதி குணநாயகம் | - | வாய்ப்பாட்டு |
| 6. | விஜயபாமினி விஜயராஜா | - | வாய்ப்பாட்டு |
| 7. | தமிழ்வாணி பாலசிங்கம் | - | வாய்ப்பாட்டு |
| 8. | கீதா விஸ்வலிங்கம் | - | நடனம் |
| 9. | சுடர்மதி யோகநாதன் | - | நடனம் |
| 10. | ஜயந்தினி பரமலிங்கம் | - | நடனம் |

## டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட்ட துறைகள், ஆண்டு, மாணவர் தொகை

| | 1986 | 1987 | 1988 | 1989 /90 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வாய்ப்பாட்டு | 03 | 05 | 08 | 07 | 07 | 08 | 04 | 11 | 09 | 09 | 10 | 07 | 07 | 95 |
| 2. நடனம் | 02 | -- | 01 | 02 | 02 | 01 | 02 | 02 | 02 | 05 | 06 | 04 | 03 | 32 |
| 3. வீணை | 02 | -- | 02 | 01 | -- | 01 | -- | 01 | 01 | 01 | -- | -- | -- | 09 |
| 4. வயலின் | 01 | 01 | 01 | -- | -- | 01 | 01 | 01 | 02 | -- | 01 | -- | -- | 09 |
| 5. மிருதங்கம் | -- | - | -- | -- | -- | 01 | -- | -- | -- | -- | 01 | -- | -- | 02 |
| மொத்தம் | 08 | 06 | 12 | 10 | 09 | 12 | 07 | 15 | 14 | 15 | 18 | 11 | 10 | 147 |

## Year, Courses and the Number of Students awarded the Diploma Certificate

| | 1986 | 1987 | 1988 | 1989 /90 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. Vocal | 03 | 05 | 08 | 07 | 07 | 08 | 04 | 11 | 09 | 09 | 10 | 07 | 07 | 95 |
| 2. Bharatham | 02 | -- | 01 | 02 | 02 | 01 | 02 | 02 | 02 | 05 | 06 | 04 | 03 | 32 |
| 3. Veena | 02 | -- | 02 | 01 | -- | 01 | -- | 01 | 01 | 01 | -- | -- | -- | 09 |
| 4. Violin | 01 | 01 | 01 | -- | -- | 01 | 01 | 01 | 02 | -- | 01 | -- | -- | 09 |
| 5. Miruthangam | -- | - | -- | -- | -- | 01 | -- | -- | -- | -- | 01 | -- | -- | 02 |
| Total | 08 | 06 | 12 | 10 | 09 | 12 | 07 | 15 | 14 | 15 | 18 | 11 | 10 | 147 |

## Diploma Certificate Holders After Completion of 4 years of Studies in the Year 1999

# ISAIKKALAI MAMANI

### Second Class Upper

| | | |
|---|---|---|
| 1. | Bagavathsingam Nithiyanandan | Badulla |
| 2. | Antony Jenifer Amma Lambert Arulmozhi | Mannar |

### Ordinary Pass

| | | |
|---|---|---|
| 1. | Jayanthini Manogara Rajah | Batticaloa |
| 2. | Gopika Thilagam Rajaratnam | Batticaloa |
| 3. | Sumathy Gunanayagam | Muthur |
| 4. | Vijayabamini Vijayarajah | Trincomalee |
| 5. | Thamilvani Balasingam | Kalmunai |

# NADANAKKALAI MAMANI

### Ordinary Pass

| | | |
|---|---|---|
| 1. | Geetha Visvalingam | Batticaloa |
| 2. | Sudarmathy Yoganathan | Trincomalee |
| 3. | Jayanthini Paramalingam | Thambiluwil |

# 1986 முதல் 1999 ஆம் ஆண்டு வரை டிப்ளோமா பட்டம் பெற்றோர் விபரம்

| 1986 ஆம் ஆண்டு | | துறை |
|---|---|---|
| 1. | புவனேஸ்வரி சதாசிவம் | வாய்ப்பாட்டு |
| 2. | ஜெயந்தி பிரிதிவிராஜ் | வாய்ப்பாட்டு |
| 3. | பத்மகௌரி மோகனசுந்தரம் | வயலின் |
| 4. | ரௌத்திரி ஜெயசோதி | வீணை |
| 5. | கௌரிமலர் மகேந்திரன் | வீணை |
| 6. | மாலதி யோகேந்திரன் | நடனம் |
| 7. | பவாநிதி சாமித்தம்பி | நடனம் |
| 8. | சக்திதேவி இராமச்சந்திரன் | வாய்ப்பாட்டு |

### 1987 ஆம் ஆண்டு

| | | |
|---|---|---|
| 1. | இரஞ்சிதராணி பூபாலபிள்ளை | வாய்ப்பாட்டு |
| 2. | தயாநிதி தங்கராஜா | வாய்ப்பாட்டு |
| 3. | சுகுமாரி செல்லத்துரை | வாய்ப்பாட்டு |
| 4. | றசீதா உம்மாமொகமதுலெப்பை | வாய்ப்பாட்டு |
| 5. | திரிபுரசுந்தரி வினாயகதேவராஜ் | வாய்ப்பாட்டு |
| 6. | இராசலெட்சுமி இராசையா | வயலின் |

### 1988 ஆம் ஆண்டு

| | | |
|---|---|---|
| 1. | இந்துமதி மகாலிங்கம் | வாய்ப்பாட்டு |
| 2. | சந்திரகுமாரி இரட்ணம் | வாய்ப்பாட்டு |
| 3. | கோமதி சரவணபவன் | வாய்ப்பாட்டு |
| 4. | மங்களகௌரி மயில்வாகனம் | வாய்ப்பாட்டு |
| 5. | வசந்தா வைரமுத்து | வாய்ப்பாட்டு |
| 6. | கணபதிப்பிள்ளை வசந்தராஜா | வாய்ப்பாட்டு |

7. ரேகா இராமச்சந்திரன் - வாய்ப்பாட்டு
8. யோகேஸ்வரி வேலுப்பிள்ளை - வாய்ப்பாட்டு
9. சாந்தினி பீதாம்பரம் - வீணை
10. நளாயினி கனகநாயகம் - வீணை
11. எமி கிருபைராஜா - வயலின்
12. கௌரிதேவி சுப்பிரமணியம் - நடனம்

## 1989, 1990 ஆம் ஆண்டுகள்

1. மாதுமையாள் சிவ அன்பு - நடனம்
2. பவானி முருகேசு - நடனம்
3. சுகுணகலா கனகரெட்ணம் - வாய்ப்பாட்டு
4. பிறிசில்லா ஞானராணி கந்தையா - வாய்ப்பாட்டு
5. கல்யாணி கந்தையா - வாய்ப்பாட்டு
6. யசோமதி சிவராஜா - வாய்ப்பாட்டு
7. வினாயகமூர்த்தி குமரப்போடி - வாய்ப்பாட்டு
8. சாந்தமலர் கந்தப்பன் - வாய்ப்பாட்டு
9. றோஜிதா இராசமாணிக்கம் - வாய்ப்பாட்டு
10. சந்திரகுமாரி தெட்சணாமூர்த்தி - வீணை

## 1991 ஆம் ஆண்டு

1. கமலேஸ்வரி கணபதிப்பிள்ளை - வாய்ப்பாட்டு
2. தமயந்தி தியாகராஜா - வாய்ப்பாட்டு
3. மங்கம்மா காசுபதி - வாய்ப்பாட்டு
4. சத்தியவாணி கந்தலிங்கம் - வாய்ப்பாட்டு
5. சுபந்தினி செல்வரட்ணம் - வாய்ப்பாட்டு
6. சிவரஞ்சனி அம்பலவாணர் - வாய்ப்பாட்டு
7. ஜெகதீஸ்வரி வேலுப்பிள்ளை - வாய்ப்பாட்டு
8. துஷ்யந்தி கதிரவேலு - நடனம்
9. செலீனா டொறின் ஜோன் - நடனம்

## 1992 ஆம் ஆண்டு

1. கிரிஜா கெங்காதரன் - வாய்ப்பாட்டு
2. டியான் செல்வமலர் செல்வநாயகம் - வாய்ப்பாட்டு
3. பிறேமலதா தர்மலிங்கம் - வாய்ப்பாட்டு
4. சுதாமதி சிவலிங்கம் - வாய்ப்பாட்டு
5. மாறி யோசப்பின் இதயராணி ஜேசுதாசன் - வீணை
6. கெப்ஸிபா ஏபிரகாம் - வாய்ப்பாட்டு
7. ஜெயரஞ்சி சின்னசாமி - வாய்ப்பாட்டு
8. மதியழகி சங்கரலிங்கம் - வயலின்
9. குகன் நல்லலிங்கம் - மிருதங்கம்
10. அருட்ஜோதி கந்தையா - வாய்ப்பாட்டு
11. சிமீத்தா சிவானந்தராஜா - வாய்ப்பாட்டு
12. மதிவதனி அழகையா - நடனம்

## 1993 ஆம் ஆண்டு

1. அழகம்மா தங்கராஜா - வாய்ப்பாட்டு
2. சிவசக்தி சிவமூர்த்தி - வாய்ப்பாட்டு
3. றூபாஜினி காளிராஜா - வயலின்
4. இந்திராணி கணபதிப்பிள்ளை - வாய்ப்பாட்டு
5. ஞானரோகினி சோமசுந்தரம் - வாய்ப்பாட்டு
6. மேரி வசந்தா ஜெபமணி தாஸ் - நடனம்
7. தேவமலர் இராஜதுரை - நடனம்

## 1994 ஆம் ஆண்டு

1. சிவராகினி மோகனராஜா - வாய்ப்பாட்டு
2. சோதிலட்சுமி அருமைத்துரை - வாய்ப்பாட்டு
3. குமுதினி அமரசிங்கம் - வாய்ப்பாட்டு
4. கிருஷாந்தி பத்மவேணி ஆரோக்கியநாதன் - வாய்ப்பாட்டு
5. மல்லிகா நடேசன் - வாய்ப்பாட்டு
6. கலைச்செல்வி ஞானபண்டிதன் - வாய்ப்பாட்டு

7. தேவதர்மினி செல்விகா சகாதேவன் - வயலின்
8. பரமரஞ்சினிதேவி பரமலிங்கம் - வாய்ப்பாட்டு
9. சந்திரகலா அரசரெட்ணம் - வீணை
10. நிரஞ்சனி மெடோனா அன்ரனி - வாய்ப்பாட்டு
11. பாரதி குணரெட்ணம் - வாய்ப்பாட்டு
12. பிருந்தா மகாலிங்கம் - வாய்ப்பாட்டு
13. குமுதினி கதிர்காமத்தம்பி - வாய்ப்பாட்டு
14. சசிகலாராணி பேரின்பநாயகம் - நடனம்
15. கிறிஸ்ரினா யோகநாயகி கயித்தாம்பிள்ளை - நடனம்

1995 ஆம் ஆண்டு

1. யூடித் அந்தோனிப்பிள்ளை - வாய்ப்பாட்டு
2. சிவதர்சினி சுப்பிரமணியம் - நடனம்
3. தேவகுமார் சுந்தரநாதன் - வாய்ப்பாட்டு
4. உமாராணி பேரின்பராஜா - வயலின்
5. சடாட்சரி வடிவேல் - வாய்ப்பாட்டு
6. றீற்றா நிர்மலா அற்புதராஜா - வாய்ப்பாட்டு
7. ருக்மணி சோமசுந்தரம் - வாய்ப்பாட்டு
8. யோகேஸ்வரி சந்தனம் - வாய்ப்பாட்டு
9. ஜெஸ்லின் ஜீவகுமாரி ஜோசப் - வாய்ப்பாட்டு
10. செல்வராணி லூட்ஸ் செபமாலை - வீணை
11. ஈஸ்வரி மயில்வாகனம் - வாய்ப்பாட்டு
12. சியாமளா செளந்தரராஜா - வயலின்
13. விஜித்திரா மயில்வாகனம் - வாய்ப்பாட்டு
14. கலாநிதி வேலுப்பிள்ளை - நடனம்

1996 ஆம் ஆண்டு


1. சோதீஸ்வரி சதாசிவம் - வாய்ப்பாட்டு
2. முருகையா மணிமொழி - வாய்ப்பாட்டு
3. கார்த்திகா சின்னையா - வாய்ப்பாட்டு
4. றஜலா பஞ்சாட்சரம் - வாய்ப்பாட்டு

5. சுகிர்தமணி தங்கராஜா - வாய்ப்பாட்டு
6. குகப்பிரியா சிவானந்தநாயகம் - வாய்ப்பாட்டு
7. சுகந்தினி ஆனந்தன் - வாய்ப்பாட்டு
8. இந்துமதி மகேஸ்வரன் - வாய்ப்பாட்டு
9. மனோரஞ்சிதம் சுப்பிரமணியம் - வாய்ப்பாட்டு
10. குமுதினி சுந்தரமூர்த்தி - வீணை
11. சுகந்தி மகாலிங்கசிவம் - நடனம்
12. மேரிபவானி முருகேசு - நடனம்
13. ஜனார்த்தனி அருணாசலம் - நடனம்
14. மோகனாம்பிகை ஜெயராஜ் - நடனம்
15. தவரஜனி சின்னத்தம்பி - நடனம்

## 1997 ஆம் ஆண்டு

1. தனலெட்சுமி சண்முகம் - வாய்ப்பாட்டு
2. குமுதினி பீதாம்பரம் - வாய்ப்பாட்டு
3. வசந்தி முருகேசு - வாய்ப்பாட்டு
4. மங்கையற்கரசி நடேசன் - வாய்ப்பாட்டு
5. தெட்சணாமூர்த்தி பிரதீபன் - வாய்ப்பாட்டு
6. பூங்கோதை தங்கமயில் - வயலின்
7. கலைவாணி பீதாம்பரம் - வாய்ப்பாட்டு
8. லக்ஷ்மிகலா பாலகிருஷ்ணன் - வாய்ப்பாட்டு
9. பங்கேஸ்வரி மயில்வாகனம் - வாய்ப்பாட்டு
10. கனகராஜா தயாளன் - மிருதங்கம்
11. பரமேஸ்வரி பிள்ளையான் - வாய்ப்பாட்டு
12. புண்ணியமூர்த்தி கருணாகரன் - வாய்ப்பாட்டு
13. அஞ்சலினா ரேவதி அந்தோனிப்பிள்ளை - நடனம்
14. சக்தீஸ்வரி சக்திதாசன் - நடனம்
15. ஜெயரஞ்சனி ஜெயராசா - நடனம்
16. விமலச்செல்வி விசுவலிங்கம் - நடனம்
17. அருணந்தி ஜூலியட் இராசதுரை - நடனம்
18. சாதனா சதாசிவம் - நடனம்

## 1999ம் ஆண்டு நடைபெற்ற
## சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் நிகழ்வுகள்



முன்னைநாள் பணிப்பாளர் திரு. எஸ். தில்லை நடராஜா ஸ்வாமிஜி அஜராத்மானந்தா ஆகியோரை கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் கல்லூரி முகப்பில் வரவேற்றல்.



முன்னைநாள் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுகின்றார்.



ஸ்வாமிஜி அவர்களின் ஆசியுரை.



முன்னைநாள் பணிப்பாளரின் உரை.



முன்னைநாள் பதில் அதிபரின் உரை.



முக்கிய பிரமுகர்களுடன் பட்டம் பெற்ற மாணவர்கள். (1999)



சான்றிதழ் பெறும் மாணவர்களின் அணிவகுப்பு.



கல்லூரி மாணவர்களின் வாழ்த்துப்பா.



கல்லூரி மாணவர்களின் இசைநிகழ்ச்சி.



கல்லூரி மாணவிகளின் நிருத்தியாஞ்சலி நாட்டிய நிகழ்ச்சி.



கல்லூரி மாணவிகளின் வாத்திய இசை நிகழ்ச்சி



தற்போதைய பதில் அதிபரின் நன்றியுரை.

# நன்றி

பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் கடந்த 1982ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரி 18 வருடங்களைத் தாண்டிய நிலையில் இன்று கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த பதினெட்டு வருட காலங்களில் 147 மாணவ மாணவிகள் இக்கல்லூரியில் கல்வி பயின்று இசை, நடனத் துறைகளில் நான்காண்டு கற்கை நெறியை முடித்து டிப்ளோமா சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தமது செயற்திட்டங்களில் முழுமையான பங்களிப்பை வழங்கி வந்துள்ளதை யாவரும் அறிவர். மாணவர்களது போராட்டமும், விரிவுரையாளர்களின் பற்றாக்குறையும் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைந்த வேளையில் கல்லூரி தடையின்றி இயங்க வேண்டும் என்பதில் திணைக்களம் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்துள்ளதென்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ் அமைச்சர் ஒருவரினால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்களுக்குப் பொறுப்பான தமிழ் அமைச்சர் காலத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது சிறப்புக்குரிய அம்சமாகும்.

இக்கல்லூரியின் மேம்பாட்டுக்காகவும், உயர்வுக்காகவும் இதுவரை காலமும் பாடுபட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மாணவர்களின் அபிலாஷையும், நம்பிக்கையும் வீண் போகாமல் இனிவரும் காலத்திலும் கல்லூரியின் உயர்வுக்காக அனைவரும் பாடுபடவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று நடைபெறும் 10 வது சான்றிதழ் வழங்கும் வைபவம் திணைக்களத்தினால் நடத்தப்படும் இறுதி சான்றிதழ் வழங்கும் வைபவமாகும். இச்சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு ஆசிச்செய்திகளை வழங்கிய இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜி அவர்கள்,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், மட்டக்களப்பு அரசாங்க அதிபர், பணிப்பாளர் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இவ்விழா சிறப்பாக நடந்தேற உதவிய பதில் அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், இதர ஊழியர்கள் அனைவரும் நன்றிக்குரியவர்களாவர்.

கடந்த காலங்களில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கல்லூரியின் செயற்பாடுகளுக்கு ஆர்வம் காட்டி ஒத்துழைப்பு வழங்கிய இராமகிருஷ்ண மிஷன் சுவாமிஜி, மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர்கள், தற்போதைய பதில் அதிபர், விரிவுரையாளர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள், நலன் விரும்பிகள், கல்லூரியின் இதர ஊழியர்கள், திணைக்களத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்காக, செயற்பாடுகளை முன்னெடுத்து வழிகாட்டிய முன்னைநாள் பணிப்பாளர்கள் தற்போதைய பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

இவர்களது தன்னலமற்ற அர்ப்பணிப்பின் மூலமே இன்று கல்லூரி நுண்கலைப் பீடமாகக் கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இனிவரும் காலத்திலும் இந்த நுண்கலைப் பீடம் சிறப்புற்று விளங்கி, இசை நடன வளர்ச்சியில் மேன்மையுற இவர்களது பங்களிப்பு மிக அவசியமாகும். அந்தப் பங்களிப்பை என்றும் எத்தருணத்திலும் இவர்கள் வழங்கிடத் திருவருளை வேண்டுகின்றேன்.

248. 1/1 காலி வீதி.
கொழும்பு - 04.

**எஸ். தெய்வநாயகம்,**
**உதவிப்பணிப்பாளர்.**
**இந்துசமய கலாசார**
**அலுவல்கள் திணைக்களம்.**

அலகில் கலையின் பொருட்கெல்லை
ஆடும் கழலே

## மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த
## இசை நடனக் கல்லூரி



*Printed by*

Kumaran Press (Pvt) Ltd.
201, Dam Street,
Colombo -12.
Tel : 421388